OS .No. 68/2022 நாள் : 18.11.2025

PW1 – சந்திரகலா

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வா.சா.ஆ.1 எனது கணவருக்கும், வீட்டின் உரிமையாளரான பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட அடமானப்பத்திரத்தின் முதல் பக்கத்தில் அடமானதாரர் என்ற இடத்தில் அவரது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 அடமானப்பத்திரத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் யாரும் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 01.08.2018 ல் எனது கணவருக்கும், பிரதிவாதிக்குமிடையே அடமானக்கடன் பத்திரம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 அடமானக்கடன் பத்திரம் 27.08.2018 தேதியில்தான் வாங்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் 01.08.2018 தேதியில் அடமானம் ஏற்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 அடமானப்பத்திரத்தில் Terms and Condition 01.10.2015 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 01.08.2018 தேதியில் எனது கணவருக்கும், பிரதிவாதிக்கும் இடையே எந்தவிதமான அடமான பத்திரம் ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 அடமானக்கடன் பத்திரத்தில் கையொப்பம் இல்லாததால் அது சட்டப்படியான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. அது முழுமை பெறாத ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தை வைத்து நான் நீதிமன்றத்தில் எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. எனது கணவரால் செலுத்தப்பட்ட தொகைக்கும், வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையொப்பத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது கணவரின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் வீட்டின் உரிமையாளரிடம் எந்த கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். அதனால் அது முழுமை பெறாத ஆவணம் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தை வைத்து காலவரையறையை நிர்ணயம் செய்யமுடியாது என்றால் சரியல்ல. எனது கணவருக்கும், பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட அடமானக்கடன் பத்திரம் எனது கணவரிடம் பணம் முழுவதும் கொடுக்கப்பட்டு அடமான ரத்து பத்திரம் எழுதப்பட்டு எனது கணவர் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது கணவரின் கையெழுத்துதான். அது **பி.வா.சா.ஆ.1** ஆகும். இவ்வழக்கின் 2ம் வாதியான எனது மகன் மனநிலை சரியில்லாதவர் என்றால் ஆறு மாதம் நன்றாக இருப்பார், ஆறுமாதம் மனநிலை மாறுபட்டு இருப்பார்.

அவரை இந்த வழக்கில் வாதியாக சேர்த்து வழக்கு நடத்த நீதிமன்றத்தில் அனுமதி பெற மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை. எனது மகனுக்கு வழக்கு நடத்தும் அளவிற்கு புரிதல் இல்லை என்றால் சரிதான். நான் மனநலம் சரியில்லாத எனது மகனை 2ம் வாதியாக சேர்த்துள்ளதால் அவரை பொறுத்தும் தொகை எதுவும் கோரமுடியாது என்றால் சரியல்ல. எனது கணவருக்கும், பிரதிவாதிக்கும் ஏற்பட்ட பி.வா.சா.ஆ. 1 அடமான கடன் ரத்து பத்திரத்தின் வாயிலாக கொடுக்கப்பட்டு விட்டதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் பேரில் நான் வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் குற்ற எண்.194/2022ல் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அதில் பிரதிவாதி 10 நாட்கள் ஜெயிலில் இருந்தார் என்றால் சரிதான். குயின் லாட்ஜ் உரிமையாளர் வாத்துக்கால் வடிவேல் என்பவரை எனக்கு தெரியும். அந்த லாட்ஜில் காவல் உயர் அதிகாரிகள் வந்து தங்குவார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன் அடிப்படையில் லாட்ஜ் ஓனரின் மகள் லெட்சுமியிடம் சொல்லி பிரதிவாதி மீது அதிகாரிகளின் செல்வாக்கை பயன்படுத்தி அவர் மீது பொய் வழக்கு போட்டேன் என்றால் சரியல்ல. நானும், எனது கணவரும் தங்கியிருந்த வீட்டிற்கு அருகில் ராஜ்குமார் என்பவர் புதிதாக வீடு கட்டினார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. அவர் வீட்டிற்கும், நான் இருந்த வீட்டிற்கும் இடையே தாய் சுவர் இருந்தது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. புது வீடு கட்டும்போது அந்த இடிந்து விடும் என்று சொன்னதற்கு நான் வாத்துக்கால் வடிவேலுடன் சேர்ந்து கொண்டு பஞ்சாயத்து செய்து வீட்டை முன்கூட்டியே காலி செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியிடம் பணத்தை பெற்றுக்கொண்டு பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.